[23rd October 1971

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : கிழக்கு ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்ட டிராக்டர்களுக்கு என்ன பெயர்? உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஏதோ சோஷலிச டிராக்டர் என்று சொன்னதாகத் தெரிகிறது. அப்படி ஏதாவது பெயர் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதற்கு ஆர்.எஸ். 09 டிராக்டர் என்பது பெயர், 20 ஹார்ஸ் பவர் உள்ளது,

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த டிராக்டர்கள் உற்பத்தி செய்த முறையிலேயே கோளாறு இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. 16 டிராக்டர்கள் விற்றதால், விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு மத்திய அரசு பொறுப்பா அல்லது மாநில அரசு பொறுப்பா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நம்முடைய சிபாரிசின் பேரில்தான் மத்திய அரசு மாநில அரசிற்கு டிராக்டர்கள் ஒதுக்குகிறது. ஆனால் இந்த டிராக்டர்கள் உபயோகப்படுத்துவதற்கு முன்னாலேயே இது சரியாகயில்லை என்று சொன்ன காரணத்தினால், ஏதோ ஒரு மிரட்சி ஏற்பட்டு ஆங்காங்கு வாங்காமல் நிறுத்தி விட்டார்கள். ஹரியானா பகுதியில் அவை சாலைகளில் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தகவல் வந்தது. உடனே நம்முடைய மாநிலத்திலுள்ள விவசாயிகளும் அதைக் கேட்டு தங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். பயன்படுத்தாமலேயே அவை நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

THIRU A. R. DAMODARAN : From the Hon. Minister's answer, there seems to be a feeling that these tractors could be put to use. May I know whether, in view of the fact that he feels that these tractors could be put to use, these 16 tractors sold to the unfortunate farmers will be withdrawn and they be reimbursed and they will be kept for use in State Seed Farms, Sir?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றுமில்லை. வாங்குகிற மாதிரி இல்லை.

Strike

* 23. *Q.* THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the loss incurred by the Electricity Board as a result of the lightning strike resorted to by the Engineers of the Tamil Nadu Electricity Board on 20th May 1970; and

(*b*) the action taken against the staff who resorted to the strike without any prior notice?

23rd October 1971]

வேலை நிறுத்தம்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணி புரியும் பொறியியல் வல்லுனர்கள் 20—5—1970-ல் திடீரென்று வேலை நிறுத்தம் செய்ததில் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

(இ) முன்னறிவிப்பு இல்லாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: விவர அறிக்கை[a] மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த இன்சினியர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இன்னும் ஒரு முடிவிற்கு வராமல் இருப்பதாக அறிகிறேன். எவ்வளவு விரைவில் அவர்கள் மீதான நடவடிக்கைகள் முடிவு பெறும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ பி. ராமன் : இப்போதுதான் ஒன்பது பேர்களின் மீதுள்ள வழக்குகளில் ஒன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எட்டு பேர் மீது விசாரணை நடத்தி, அந்த அறிக்கை முதன்மை இன்சினியருக்கு வந்திருக்கிறது. விரைவில் முடிவு அறிவிக்கப்படும்.

Mr. CHAIRMAN : Questions are over.

[*Note* :—An Asterisk (*) at the commencement of a speech indicates revision by the Membre.]

(Thiru G. Vasantha Pai rose.)

Mr. CHAIRMAN : I have to make some announcements to the House. The hon. Member may please wait a little while.

II. Announcements.

(1) *Message from the Governor.*

Mr. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Excise Bill, 1971.

(2) *Messages from the Assembly.*

Mr. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Excise Bill, 1971 (L.A. Bill No. 37 of 1971) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

---

a Printed as Appendix II on pages 151–152.